International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

முல்லைப்பாட்டு உணர்த்தும் தலைவன் தலைவி உறவுநிலை

ஆ. பிரவீணா, முனைவர் பட்ட ஆய்வாளர்
முனைவர் சொ. சுரேஷ், நெறியாளர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி - 03

முன்னுரை

உலகில் தோன்றிய மொழிகளுள் சிறந்த மொழியாக விளங்குகின்ற தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றில் மக்களின் காதல் வாழ்க்கை பற்றி விவரிக்கும் அக நூல்களுக்குத் தனி இடம் உள்ளது. தலைவன் தலைவி உறவென்பது காதல் வாழ்க்கையில் உள்ள உறவை அடிப்படையாகக் கொண்டது. இதனடிப்படைக் கொண்டே சங்க அகப்பாடல்கள் எழுந்துள்ளன. அவ்வகையில் சங்க இலக்கியப் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான முல்லைப்பாட்டில் தலைவியைப் பிரிந்த தலைவன் கார்க்காலத்தில் திரும்பி விடுவதாகக் கூறிச் சென்று உரிய காலத்திற்குள் வராத சூழலில் உள்ள தலைவியின் மனநிலை குறித்தும், தலைவியைப் பிரிந்து போருக்குச் சென்ற தலைவனின் மனநிலை, வெற்றி வாகைச் சூடி வரும் தலைவனின் வருகை அறிந்து தலைவிக் கொள்ளும் மகிழ்ச்சியினைப் பற்றி ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

முல்லைப்பாட்டு

சங்க இலக்கிய நூலான பத்துப்பாட்டில் பாட்டு என்ற தலைப்பில் அமைந்த நூல்கள் இரண்டாகும். அவை **முல்லைப்பாட்டும் குறிஞ்சிப்பாட்டும்** ஆகும். முல்லைப்பாட்டு அகப்பாட்டு வகையை சார்ந்தது. பத்துப்பாட்டில் 103 என குறைவான அடிகளைக் கொண்ட நூல் இதுவாகும். முல்லைப்பாட்டிற்கு **நெஞ்சாற்றுப்படை** என்ற சிறப்புப்பெயரும் கொண்டு அழைக்கப்படுகிறது. முல்லைப்பாட்டில் கார்கால வருணனையும், மாலைக்கால வருணனையும் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் **காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்** ஆவார். முல்லைப்பாட்டில் நப்பூதனார் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றையும் அக மாந்தர் வாழ்வியலை எடுத்துலைப்பதற்குச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

தலைவி நிலை

தலைவன் போர் காரணமாக தலைவியைப் பிரிந்து செல்கின்ற போது, கார்க்காலத்தில் வந்துவிடுவதாகக் கூறுகிறான். கார்க்காலம் வந்தும் தலைவன் வராததால் தலைவி அதனை எண்ணி கவலைக் கொள்கிறாள். மேலும், தலைவனை பிரிந்த தலைவிக்கு மாலைப் பொழுதானது துயரத்தை தருவதை,

> **கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி**
> **பெரும்பெயல் பொழிந்த சிறுபுண் மாலை** (முல்லைப்பாட்டு:5-6)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

நற்சொல் கேட்டல்

தலைவனக் காணாது துன்பத்தில் இருக்கும் தலைவியின் நிலையினைக் கண்டு, வயதான பெண்டிர் திருமால் கோயிலில் நற்சொல் கேட்க நிற்க, அப்போது அங்கு தாயைக் காணாது தவித்துக் கொண்டிருந்த கன்றுகளை நோக்கி இடையர்குல பெண் ஒருத்தி, உங்கள் தாய் **'விரைவில் வந்து**

விடுவார்' என்று கூறுகிறாள். அதனை,

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கையை
கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
(முல்லைப்பாட்டு:12-16)

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

இதனைப் போன்று விரிச்சி கேட்டுக்கும் பெண்களை நற்றிணை,

திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
(நற்.40:4)

என்று கூறுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு நற்சொல் கேட்பதை, தொல்காப்பியம் விரிச்சி என்றே குறிப்பிடுகிறது.

படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி
(தொல்.புறம்.61:1)

இதற்கு இளம்பூரணர் **'பாக்கத்துக்கண் நற்சொல் ஆய்தல்'** என்று பொருள் கூறுகிறார்.

தலைவியின் மீளாதக் கவலை

தலைவியிடம் முதிய பெண்டிர் தலைவன் சென்ற காரியம் வெற்றியுடன் முடித்து மீண்டும் உன்னிடம் வருவான் என்று ஆறுதல் கூறுகின்றனர்.

மேலும், தலைவியிடம் ஆறுதலாகத் தலைவன் வந்துவிடுவான் என்று பலமுறை கூறியும், அதனை பொருட்படுத்தாது தலைவனை எண்ணி கவலைக் கொள்கிறாள். இதனை,

காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போல் உன்கண் புலம்பு முத்துறைப்பக்
(முல்லைப்பாட்டு:22-23)

என்ற பாடலடிகள் லிளக்குகிறது. அதாவது, தலைவனை எண்ணி மனக்கலக்கம் கொண்டுள்ள தலைவியின் பூப்போன்ற கண்களானது முத்துகள் போன்று கண்ணீரை வடித்து வருந்துவதாக பாடலானது உணர்த்துகின்றது

தலைவனின் நிலை

தலைவன் போர்க்கள நிகழ்ச்சிகளை நினைத்து உறங்காமல் அதனைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறான். இதனை,

மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது
(முல்லைப்பாட்டு:67)

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது. அதாவது, போர்க்களத்தில் தன் நாட்டிற்காக இறந்த போர் வீரர்கள் பற்றியும், தம் பெண்யானைகளை மறந்து கூரிய வேல்களால் புண் உண்டாகிய ஆண் யானைகள் பற்றியும், கூர்மையான அம்புகளால் தைத்து புல்லுண்ணாது துன்புறும் குதிரைகளைப் பற்றியும் தலைவன் உறங்காமல் எண்ணிக் கொண்டு இருக்கிறான். இதன்மூலம் தலைவனின் தலைமைப் பண்பினை அறியமுடிகின்றது.

தலைவன் தலைவி நிலை

தலைவி தலைவனைக் காணாது துன்புற்று, தன் நெஞ்சு தன்னை வழிப்படுத்தியும், ஆற்றாது தலைவனை நினைத்து வருந்துகிறாள். இதனை,

நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
(முல்லைப்பாட்டு:81)

என்ற பாடலடி விளக்குகிறது. மேலும், தலைவனின் பிரிவால் தலைவியின் கைவளையல் கள் கழன்றும், ஆபரணங்கள் நெகிழ்ந்தும் உள்ளன என்பதை,

நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து
(முல்லைப்பாட்டு:82-84)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது.

தலைவி தலைவனை எண்ணி துயரத்தில் உறங் காமல் இருக்க, தலைவன் போர்க்களத்தில் பகைவரை வென்று வெற்றிக் கண்ணியைச் சூடுகிறான். ஆகையால் அன்று இரவு இனிது உறங்குகிறான். அது,

நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
அரசிருந்து பனிக்கும் முரசுமுழங்கு பாசறை
இன்துயில் வதியுநன் காணாள் துயருழந்து
(முல்லைப்பாட்டு:78-80)

என்ற பாடலடிகள் மூலம் புலனாகிறது.

இதனைப் புலவர் கா.கோவிந்தன், "அவன் மேற்கொண்டு வந்தவினை, முடிந்துவிட்டது. பகையரசரை வெற்றி கொண்டாயிற்று. அவர் களும் திறைக்கொடுத்து, அவன் தலைமையைப் பணிந்து ஏற்றுக்கொண்டு விட்டனர். கடமை முடிந்த நிலையில், அக்கடமையுணர்வால் அடக்கி வைக்கப்பட்டிருந்த காதல் உணர்வு, கொழுந்து விட்டுப் பெருகியிருக்க வேண்டும். 'கிழவி நிலையே வினையிடத்துரையார், வென்றி காலத்து விளங்கி தோன்றும்' என்பது தொல்காப்பியம். மேலும், வினை முடிந்து, வருவதாக வாக்குறுதி அளித்து வந்த, கார்கால வரவை அறிவூட்டும் புது மழையும் பெய்ந்து ஓய்ந்துவிட்டது. அந்நிலையில் அவ்விளையவைந் தன் உள்ளத்தில் துடித்து எழ வேண்டியது, மனையகத்தே விட்டு வந்திருக்கும் மனைவியின் நினைவு. ஆனால் அது நிகழவில்லை. காதலி நினைவு, அவனுக்கு வரவில்லை; காரணம் நயத்தக நாகரீக நெறி நிற்பவன் அவன். 'சேர்ந்தோர் புண் கண் அஞ்சும் பண்பின் மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே.' 'அறிவினான் ஆவது உண்டோ? பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றாக்கடை?' என்பன போலும் ஆன்றோர் உரைகளை உள்ளத்தில் ஏற்றிருப்பவன்." என்கிறார்.

இதன் மூலம் தலைவன் தன்னுடைய படை வீரர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவாக இருக்கும் சிறந்த பண்பாளன் திகழ்கிறான் என்பதை அறியமுடிகிறது.

தலைவன் வருகையும், தலைவி நிலையும்

தலைவி தனித்து வீட்டில் இருக்க, தலைவன் போர் முடித்து வரும் தேரின் ஓசை கேட்டு மகிழ்ச்சிக் கொள்கிறாள். இதனை,

பாவை விளக்கில் பரூஉச்சுடர் அழல

இடம்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து

முடங்கிறைச் சொரிதரு மாத்திரள் அருவி

இன்பல் இமிழிசை ஓர்ப்பானள் கிடந்தோள்

அஞ்செவி நிறைய ஆலின, வென்றுபிறர்

(முல்லைப்பாட்டு:85-89)

என்ற பாடலடிகள் மூலம் தெளிவாகிறது. தலைவி எழுநிலை மாடத்தில் இருக்க, அருவிப் போன்று நீர் வீழ்ச்சியின் ஓசையினைக் கேட்டுக் கொண்டு, தலைவனை நினைத்துக் கொண்டிருக் கிறாள். அப்போது தலைவன் பகைவரை வென்று குதிரைப் பூட்டிய தேரின் ஒலியானதும், குதிரையின் கனைப்பு ஒலியானதும், தலைவியின் செவி களில் கேட்கிறது. அதனால், தலைவி மகிழ்ச்சியடைகிறாள்.

இதனைப் புலவர் கா.கோவிந்தன், **''அவள் காதலன் ஊர்ந்து வந்த தேரைக், காற்றென ஈர்த்துக் கொணர்ந்து அவள் மனைவாயிலில் நிறுத்திய குதிரைகள் எழுப்பிய கனைப் பொலி, அவள் காதுகளுள் கடிதின் நுழைந்து, அவளைக் கனவுலகத்திலிருந்து நினைவுலகிற்குக் கொண்டு வந்து விட்டது. குதிரையின் கனைப்பொலியில் இசை இன்பம் காண இயலாது என்றாலும், அது அவள் காதலனைத் தன்பால் கொண்டுவந்து சேர்த்த குதிரைகள் எழுப்பிய ஒலி; ஆகவே அவளைப் பொறுத்தவரையில் அதற்கு ஏழிசையைக் காட்டிலும் ஆற்றல் அதிகமாகி விட்டது.''** என்கிறார்.

இதன்மூலம் தலைவனின் தேர் ஒலியானது பிற இசையைக் காட்டிலும், தலைவிக்கு மிகுந்த இன்பத்தைத் தருவதாக இருக்கின்றது என்பது தலைவனின் மீது தலைவிக் கொண்டிருந்த காதல் உறவை அறியமுடிகின்றது. கூறுகிறார்.

தலைவனானவன், மணலில் வளர்ந்த காயாஞ்செடிகளையும், பொன் போன்ற கொன்றை மரத்தையும், குவிந்த மொட்டுகளைக் கொண்ட காந்தள் மலர் நிறைந்த முல்லைக் காட்டைக் கடந்து வந்து கொண்டிருந்தான். இதனை,

செறியிலைக் காயா அஞ்சனம் மலர

முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்

கோடல்குவிமுகை அங்கை அவிழ்த்

தோடார் தோன்றி குருதி பூப்பக்

(முல்லைப்பாட்டு:93-96)

என்ற பாடலடிகள் விளக்குகிறது.

மேலும், வரும் வழியில் மான்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கின்றன. இதனை,

கானம் நந்திய செந்நிலப் பெருவழி

வானம் வாய்ந்த வாங்குகதிர் வரகின்

திரிமருப்பு இரலையொடு மடமான் உகள்

(முல்லைப்பாட்டு:97-99)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. தலைவன் வரும் முல்லைக் காட்டில் மழை பெய்ததால் வரகு விளைந்துள்ளது எனவும், சிவந்த நிலமாகிய அக்காட்டில் இரலை மான்களுடன் மடமான்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருக் கிறது.

இதன்மூலம் தலைவனுக்கு மான்கள் விளையாடு வதைக் கண்டு தலைவியின் நினைவு வர தேரினை விரைந்து செலுத்தி தலைவியிடம் வந்தடைகிறான். இதன்மூலம் தலைவன் தலைவி மீது கொண்ட காதல் உறவினை அறிய முடிகிறது.

முடிவுரை

சங்க காலச் சமூகத்தில் தலைவன் தலைவி இவ்விருவரின் உறவுநிலை இன்றியமை யாதது என்பதை சங்க இலக்கியத்தின் வழி அறியமுடிகிறது. முல்லைப்பாட்டில் கார்க் காலத்தில் திரும்பி வந்துவிடுவதாகக் கூறிய தலைவன் வராததால் தலைவி வருத்தம் கொள்கிறாள். மேலும், மாலை பொழுது தலைவிக்கு பெருந்துயரத்தைத் தருகின்றது. தலைவியை ஆறுதல்படுத்த முதிய பெண்டிர் கூறும் நற்சொற்களையும் பொருட்படுத்தாமல் வருத்தமடையும் போது தலைவன் மீது தலைவிக் கொண்டிருந்த உறவினை அறிய முடிகிறது. போர் முடிந்து பின்பு வரும் தலைவன் வரும் வழியில் மான்கள் விளையாடுவதைக் கண்டு தலைவி தனக்காக காத்திருக்கிறாள் என்ற நினைவு வந்து தன் தேரை விரைந்து செலுத்துவதன் மூலம் தலைவன் தலைவி மீதுக் கொண்ட காதல் உறவினை அறியமுடிகிறது.

துணைநின்றவை

1. **நச்சினார்க்கினியர் (உரை)** – பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியார் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், பெசன்ட் நகர், சென்னை-90
2. **சுப்பிரமணியன்.ச.வே** - சங்க இலக்கியம், பத்துப்பாட்டு(மூலமும் உரையும்), மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108.
3. **வேங்கடராமன்.**H - நற்றிணை, மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், பெசன்ட் நகர், சென்னை-90
4. **இளம்பூரணர் (உரை)** - தொல்காப்பியம்-எழுத்து-சொல்-பொருள், சாரதா பதிப்பகம், சென்னை-14.
5. **கோவிந்தன்.கா** - திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே.சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை-18.